# சந்தேக நிவாரணி
## ப்ரச்னோத்தர வாஹினி

மூலம்
பகவான் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சத்திய சாய் பாபா

தமிழாக்கம்
**என்.கஸ்தூரி,** எம்.ஏ.பி.எல்

## 12. உன்னுள்ளே மஹாபாரதம்

**பக்தன் :** சுவாமி, தாங்கள் வெங்கடகிரியில் அத்யாத் மிக சபையில் சொற்பொழிவு ஆற்றினீர்கள் அல்லவா ! அதிலே சில ஐயங்கள். அவற்றை நீக்கிக் கொள்ளலாம் அல்லவா ?

"ஸ்தூலரூபம்" (பருப்பொருள்) "சூட்சும ரூபம்" (நுண் பொருள்) என்று கூறினீர்கள் அல்லவா? அவ்விரண்டும் மனத்திற் கென அமைந்த சிறப்பிலக்கணமா ? அல்லது வேறு பொருளுக்கும் ஏற்புடையதா, சுவாமி ?

**சுவாமி :** அக் குணங்கள் ஒவ்வொன்றிற்கும் ஏற்புடைத்து. உண்மையில், பருப்பொருளில் காணும் எல்லாப் பெயர்களும், உருவங்களும் நுண்பொருளிலும் அமைந்து கிடக்கின்றன. அந் நுண்பொருளைக் காட்டுவிக்க இயலாமையினால், பருப் பொருளை எடுத்துக்காட்ட வேண்டியதாகிறது.

**பக்தன்:** நன்று சுவாமி, நாம் காணும் இந்த ஸ்தூல ஆகாயத்திற்கும், சூட்சும ஆகாயம் உள்ளதா ?

**சுவாமி :** என் அன்பு மகனே! யாவும் சூட்சும ஆகாயத்தில் நிலைத்தவைதான். இந்த ஸ்தூல ஆகாயத்தைப் போன்று, அந்தச் சூட்சும ஆகாயமும் எங்கும் வியாபித்து மிக நுண்ணியதாக இருக்கிறது.

**பக்தன் :** அதன் பெயர் யாது/ சுவாமி ?

**சுவாமி :** "சூட்சும இருதய ஆகாசம்."

**பக்தன் :** அது எவ்வாறு யாவற்றிலும் வியாபித்திருக்கிறது?

**சுவாமி :** அந்த இருதய ஆகாசம் பெற்றிருப்பதுபோன்ற நீளமோ அகலமோ பரிமாணமோ வேறொன்றுமே பெற்றிருக்க வில்லை ! ஆ ! ஹா ! அங்கே எத்தனைவிதக் காட்சிகள், எத்தனை எண்ணங்கள், எத்தனை நினைவுகள்,

*கற்பனைகள் பதிந்து கிடக்கின்றன. நினைத்துப் பார் மகனே! நினைத்துப் பார் !!*

**பக்தன் :** *அவ்வாறாயின் சூரியனுக்கும் ஒரு சூட்சும சூரியன் இருக்கவேண்டுமல்லவா ?*

**சுவாமி :** *இருக்கிறதே. இல்லையென்று கூறியவர் யார் ? அந்தச் சூட்சும சூரியன் இல்லையேல் இந்த ஒளியும் காந்தியும் அறிவும் எவ்வாறிக்க முடியும் ?*

**பக்தன் :** *அதனை எவ்வாறு அழைக்கின்றனர், சுவாமி ?*

**சுவாமி :** *இருதயம் ஆகாயமானதால் அதனை மிளிரச் செய்யும் சூரியன் புத்தியாகிறது. புத்தியின் ஒளி ஞாயிறின் கதிர்களைப் போன்ற பெரும் பிரகாசம் உடையது. எனவே சூட்சும சூரி-யனாவது புத்தி.*

**பக்தன் :** *எனவே, ஆகாயமாம் இருதயத்தில், சூட்சும சந்திரனும் இருக்க இடமிருக்கிறதல்லவா சுவாமி ?*

**சுவாமி :** *ஒன்றொன்றாக ஏன் கேட்டுக்கொண் டிருக்கிறாய்? ஆரம்பத்திலே நான் கூறவில்லையா ! ஒவ்வொரு ஸ்தூல பொருளுக்கும் ஒவ்வொரு சூட்சுமப் பொருள் உண்டென்று. இருதயத்தை இனிமையாக்கும் பிரேமைதான் சந்திரன். எனவே சந்திரனின் சூட்சும உருவம் அன்பு.*

**பக்தன்:** *மன்னியுங்கள்., சுவாமி . மற்றோர் ஐயம். பாண்டவர்களும் கௌரவர்களும் போரிட்டனர் அல்லவா? அதன்கண் எதனை சூட்சுமப் போரென்றும், போரிட்ட பாண்டவர்களையும் கௌரவர்களையும் எத்தகைய சூட்சும உரு என்றும் நினைத்துக் கொள்வது, சுவாமி ?*

**சுவாமி :** *"போரையும்," "அவர்களையும்" ஏன் நினைத்துக் கொள்வது? சூட்சும உருவில் இன்றும் அப் போர் நிகழ்ந்த வண்ணமே இருக்கிறது ! ஒவ்வொருவரும் தனது இருதய ஆகாசமாம் சித்த பூமியில் ஒவ்வொரு வினாடியும் போரிட்ட வண்ணம் இருக்கின்றனர். இப் போரிலே தீய குணங்கள் கௌரவர்கள். நற்குணங்களாகிய சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை ஆகிய ஐந்தும் பாண்டவர்கள். தீய*

குணங்கள் அளவின்றி இருப்பதனால் கௌரவர்கள் ஒரு பெருங் கூட்டமாக இருக்கின்றனர்.

**பக்தன்:** மன்னன் பாண்டுவின் மைந்தர்கள் பாண்டவர்களென்றும், திருதராஷ்டிர மன்னனின் மக்கள் கௌரவர்கள் என்றும் கூறுகின்றனரே, அவர்களைச் சூட்சும உருவில் எவ்வாறு கொள்வது சுவாமி?

**சுவாமி:** அவ்விருவரும் இருதயமாம் அரசினைக் கைப் பற்ற நின்ற வாதிகள். ஒருவன் அஞ்ஞானி (அறிவிலி) மற்றொருவன் சுஞ்ஞானி (அறிஞன்). அந்தக் குருட்டு ஆட்சியாளன் திருதராஷ்டிரன்தான். அஞ்ஞானி. நற்குணங்களின் தந்தையான பாண்டுதான் சுஞ்ஞானி. விளங்குகின்றதா?

**பக்தன் :** அவ்வாறாயின்... மன்னியுங்கள் சுவாமி. அந்தப் போரிலே இலட்சக்கணக்கான போர்வீரர்களும் தேர்களும் மக்களும் இருந்தனரே, அவர்களது நிலை என்ன ?

**சுவாமி :** நிச்சயமாக அவர்களும் மனிதனில் உள்ளனர். ஒருவனது உள்ளத்தே தோன்றுகின்ற எண்ணிறந்த எண்ணங் களும், நினைவுகளும், உணர்ச்சிகளும் அப் போர் வீரர்களும், குடி மக்களும் ஆவர். பத்து இந்திரியங்களும் போர்த்தளங்கள். ஐம்பொறிகளும் தேர்கள். ஒவ்வொருவனுடைய உள்ளத்திலேயே நன்மைக்கும் (பாண்டவர்), தீமைக்கும் (கௌரவர்) இடையே ஓயாத போர் நடந்து கொண்டே யிருக்கிறது. ஐயம் விளங்கிற்றா ?

**பக்தன் :** விளக்கமுற்றேன், சுவாமி. மற்றோர் ஐயம். அப் போரிலே நடுநிலைமை வகித்தாரே, கண்ணபிரான் அவரைப் பற்றிக் கூறவில்லையே ?

**சுவாமி:** அறியாயா ! சாட்சியாய் நின்று கவனிக்கும் ஆத்மாதான் கண்ணன். அவர்தான் ஜீவனாகிய தேரினை ஓட்டும் சாரதி.

**பக்தன் :** மனிதனில், அம் மக்களது தலைநகரம், அஸ்தினா புரம் ?

**சுவாமி:**அந் நகரம் இவ் வுடம்பின் எலும்பாகிய நகரம்! எலும்புக்கூடு !! (அஸ்தி- எலும்பு). இரண்டிற்கும் ஒன்பது வாயில்கள். இங்குதான் கௌரவர்களும், பாண்டவர்களும், பிறந்தார்கள், வளர்ந்தார்கள், பயின்றார்கள். அவ்வாறே எலும்பாம் நகரமாகிய அஸ்தினாபுரத்தில் நல்லவை பிறந்தன, தீயவையும் பிறந்தன, அன்பு பிறந்தது, அகந்தையும் பிறந்தது. மாறுபட்ட இரண்டு குணங்களுக்கும் இடையே என்றும் போர். எனவே தீயவைகளின் ஆட்சியாளன் சுஞ்ஞானி.

**பக்தன்:** ஆம், சுவாமி. ஒரு மனிதனின் நடத்தைக்கும், குணங்களுக்கும் மஹாபாரதப் போருக்கும் இடையே நெருங்கிய ஒற்றுமை உள்ளது. ஐயமே யில்லை. எத்தகைய உவமை ! என்னே இனிமை ! தாங்கள் கூறியது போல் ஒவ்வொருவர் உடலிலும் இப் போர் நடந்துகொண் டிருக்கிறது சுவாமி ! இப் போர் என்று முடிவுறும் ?

**சுவாமி :** என்ன ? என்று முடிவுறும் என்றா கேட்கிறாய் ? சொல்கிறேன் கேள். என்று இந்த நற்குணமும், தீயகுணமும் தங்களது குணமிழந்து இணைய, மனிதன் குணம் அற்றவனாய் நிற்கிறானோ அன்றுதான் இப் போர், உள்ளத்தே நிகழும் மஹாபாரதப் போர், ஓயும் சாந்தியும் பிறக்கும், மகனே.

**பக்தன்:** அப்பொழுது, போர்க்களமாய் இருக்கிற இந்த எலும்புக் கூடாம் அஸ்தினாபுரம் வாழுமா, சுவாமி ?

**சுவாமி:** போர் என்று ஒன்றிருக்குமாயின், போர்க்களம் என்று ஒன்றிருக்க வேண்டுமன்றோ ? போரில்லையேல் களத்தைப் பற்றிக் கவலை ஏன் ?

**பக்தன் :** எனவே, இந்தப் போர் ஓயவே ஓயாது போலும்?

**சுவாமி :** ஏன் ஓயாது ? மன்னர்கள் போர் உணர்ச்சியை வளர்த்துக்கொள்வதற்குக் காரணம் குடிமக்களின் நன்னம்பிக் கையும், தூண்டுதலுமே. போதுமான மக்கள் பலம் இல்லையேல், போர் தோன்ற வழியெங்கே ? ஆதலின், என் மகனே ! குடிமக்களாகின்ற பிரமை, மாயை, அகந்தை, "நான்" "எனது" என்னும் உணர்ச்சிகள் முதலானவற்றை அழித்துவிடு. இடையறா சாந்தி பெறுவாய். அச்சாந்தியை எவற்றாலும்

பெறுவேன்; அதனை அடையும்வரை ஓயமாட்டேன் என்று உறுதிகொள், மகனே !

இவ்வுறுதியுடனே சென்றுவா. இரு ! இரு !! ஒரு வார்த்தை. எத்தகைய ஐயங்களில் சிக்குண்டாலும், அதுவும் ஒரு மாயை (வியமோகம்). அதனின்றும் நீ விடுபட்டேயாகவேண்டும். இனி நீ விடைபெற்றுக் கொள்.

**பக்தன் :** என் பகவானே, போய்வருகிறேன்.